
# மஹாகாலின் நெற்றிக் கண்ணைப் புரிந்து கொள்வோம்

தண்டனைக்கல்ல – தகுதிக்குப் பாத்திரமாவோம்.



தயவு கூர்ந்து இதைத் தினமும் ஒருமுறை நாமும் படிப்போம் பிறரையும் படிக்க வைப்போம்

தைரியம் நம்மை அழைக்கிறது. காலம், யுகம், கடமை, பொறுப்பு, விவேகம், ஆண்மை நம்மை அழைக்கின்றன. இந்த அழைப்பு கேட்கப்படாமல் போய்விடக்கூடாது. ஆன்மிக மேம்பாட்டிற்காக, புதிய மேம்பாட்டிற்காக நாம் முட்கள் நிறைந்த பாதையை வரவேற்கிறோம். முன்னேறிச் செல்வோம். மக்கள் என்ன சொல்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்பதைப் பற்றி யாருக்கென்ன கவலை? நமது ஆன்மாவே வழி காட்டுவதற்குப் போதுமானது. மக்கள் இருட்டில் தடுமாறுகிறார்கள். வழி தவறிக் கொண்டிருக்கட்டும், நாம் நமது விவேகத்தின் ஒளியின் துணை கொண்டு, நாமாகவே முன்னேறுவோம். யார் எதிக்கிறார்கள், யார் ஆதரிக்கிறார்கள், இதை யார் கணக்கெடுப்பது? நமது அந்தராத்மா, நமது தீரம் நம்முடன் உள்ளன. உண்மைக்காக, தர்மத்திற்காக, நியாயத்திற்காக, நாம் தனியாகவே முன்னேறுவோம், நம்மைப் போன்ற விழிப்புணர்வுள்ள மனிதர்களுக்குத் தகுதியான, ஏற்ற செயல்களையே செய்வோம்.

மாற்றத்திற்கான திறமையான துணிச்சல் தேவை. உலகில் துணிச்சல் இல்லாமல் போய்விட்டது. இளமையின் ஆர்வலர்களைக் கொண்டு கோழைத்தனம் பிடித்துள்ளது. நாம் இந்தக் களங்கத்திற்கு நம்மை ஆட்படுத்திக்

கொள்ளமாட்டோம். மேலும் யாருமில்லாவிட்டாலும் நாம் தனித்தே முன்னேறுவோம். முன்னேறுகிறோம், விரும்பத்தகாத சூழ்நிலைகள், கருத்துக்கள், சிந்தனைகள், ஆகியவற்றிக்கு ஒரு முடிவு ஏற்படாதவரை முன்னேறிக்கொண்டே இருப்போம். யுகத்தை மாற்றவேண்டும். அதனால் நமது பார்வை மற்றும் செயல் இவற்றின் மாற்றத்தைத் துணிச்சலுடனோ அல்லது துணிச்சல் இல்லாமலோ செய்துதான் ஆகவேண்டும். இதைத் தவிர வேறு வழியில்லை.

நாம் யுகத்தின் அழைப்பை மீண்டும் மீண்டும் அறிவிக்கிறோம். நேரம் இருக்கும்போதே இந்த யுக அழைப்பைக் கேட்டுக்கொள்ளுதல் சிறந்தது. கேட்காவிட்டால் நாம் அதிகமாகச் சொல்லமாட்டோம். எச்சரிக்கை மட்டும் செய்து விடுகிறோம். மஹாகால் அவர்கள் அறிவாற்றலைத் தனிப்பட்ட, சுயநல சாதனைகளில் கட்டுண்டு கிடப்பதில் இருந்து விடுவித்து விடுவார். யாரும் செல்வத்தை இஷ்டப்படி செலவு செய்ய முடியாது. யாருடைய அறிவும் தனிப்பட்ட ஆசைகளைப்பூர்த்தி செய்து கொள்வதில் ஈடுபட முடியாது. யாருடைய பலமும் விருப்பங்பளைப் பூர்த்தி செய்வதில் ஒன்றியிருக்க அனுமதிக்கப்படமாட்டாது.

குறித்துக் கொள்பவர்கள் குறித்துக் கொள்ளுங்கள், எதை நாம் சுயவிருப்பத்துடனும், நல்லெண்ணத்துடனும், (மானிய) இலவசமாக வேண்டுகிறோமோ, அது மக்களால் கொடுக்கப்படவில்லை யென்றால், ஒவ்வொரு கருமியிடமிருந்தும் இந்த தெய்வச் சிறப்புகளை மஹாகால் அவர்கள் உழைத்துக் கக்க வைத்து எடுத்துக்கொள்வார். அப்போது வெகு நேரம் வரை வலி–முனகல் நிறைந்த வேதனையைப் பொறுத்தக்கொள்ள வேண்டியிருக்கும். அந்த நாள் அதிக தூரமில்லை. இன்று தியாகம், தயாள குணம், சந்தோஷம், துணிச்சலான புகழ், இவற்றுடன் செய்யக்கூடிய ஒரு வாய்ப்பு உள்ளது.

வரும் நாட்களில் உலகில் ஒரு மனிதர் கூடப் பணக்காரராக இருக்க முடியாது. சொத்து பங்கிடப்படும் செல்வத்தின் மீது சமுதாயத்தின் கட்டுப்பாடு இருக்கும். மேலும் நாமெல்லாரும் பொருட்களைக் கையாள்வதற்குப் பயன்படுத்த மட்டுமே முடியும்.

புத்தரைப் பின்பற்றுபவர்கள் தியாகத்தின் மருத்துவத்தை பரப்பினார்கள் என்றால், இளைஞர்களும், யுவதிகளும் இளமையின், கொண்டாட்டத்தின், சுகத்தை விட்டு, இறைவழிப் பயனுக்காக பிட்சுக்களாகவும், பிச்சுணிகளாகவும், கஷ்டங்கள் உடைய வாழ்வை வாழ்வதற்குத் தயாரனார்கள். காந்தியின் புயல் வீசியபோது, தேவையான பணிகளையும், வண்ணமயமான கனவுகளையும் கால் தூசாகத் தூக்கியெறிந்து, லக்ஷக்கணக்கான மாமனிதர்கள் சிறையில் அடைபடவும், தூக்கில் தொங்கவும், குண்டுகளுக்கு இரையாகவும் உடன்பட்டார்கள். அப்போது மக்கள் அவற்றைப் புரிந்து கொள்ளவில்லை என்று சொல்லலாம். ஆனால் அந்த முடிவு அவர்களுக்கு மங்கலம், நற்புகழ், இவற்றிற்கான வாசலைத் திறந்து, அவர்கள் மேன்மையடைந்தார்கள்.

இப்போதும் கூட மஹாகாலர் அறிவாற்றலை யுகத்தலைமைக்காக அழைக்கிறார். நல்வாய்ப்பு மற்றும் மங்கலத்திற்கான இணையற்ற தருணம் முன்னால் உள்ளது. விருப்பம், ஆசை மற்றும் அஹந்தை இவற்றின் கொடிய சக்கரத்தை உடைத்து, போராளிகள்–புதிய படைப்பின் வீரர்கள் முன்னேறுவார்கள். தெய்வ அருளுக்குப் பாத்திரமாவார்கள். அவர்களிடமிருந்து ஒளிந்து கொள்வதற்கு முயற்சி செய்பவர்கள் பெருத்த நஷ்டமடைவார்கள். மஹாகாலர் அந்தக் கொடிய சக்கரங்களைப் பயங்கரமான அடியால் உடைத்தெறிவார். அப்போது அவரிடமிருந்து ஒளிந்து கொள்பவர்களுக்கு என்ன நடக்கும். இதைப் பெரும்பாலும் யாரும் எண்ணிக் கூடப் பார்க்க முடியாது.

மக்கள் ‘விவேகத்தின் சொற்களை’ ஏற்றுக்கொள்வது நல்லது. பயங்கரமான ஆபத்தான பச்சாத்தாபம், வேதனையிலிருந்து தப்பிக்கலாம். இணையற்ற சௌபாக்கியம், நற்புகழ் இவற்றிற்குப் பாத்திரமாகலாம்.

‘யுக் கே புகார் ஜிஸே ஸுன்ஹீ ஜாய்’ புத்தகத்திலிருந்து பண்டிதர் ஸ்ரீராம் சர்மா ஆச்சார்யா


**அகில உலக காயத்ரி பரிவார்**

**ஷாந்திகுஞ்ஜ், ஹரித்வார் (உத்தரகாண்ட்) 249 411.**

செல் : **+91 92583 60651**

இ-மெயில் : south@awgp.in வெப்சைட் : www.awgp.org


**"அஸ்வமேத காயத்ரி மஹா யாகம்"**

**உங்களை அன்புடன் வரவேற்கிறது**

**2016 ஜனவரி 28 முதல் 31 வரை**

**இடம் : விவேகானந்தா கேந்திரம், கன்னியாகுமரி, தமிழ்நாடு, தென்னிந்தியா**

இ-மெயில் : gck.kanyakumari@awgp.in **(கோ ஆர்டினேட்டர்)**

**GAYATRI PARIWAR TAMILNADU CENTERS**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Chennai | : | 9003149639, 9962929214 | Nagercoil | : | 8939353511, 9362823000, 9442365447, LL : 04652-230447 |
| Coimbatore | : | 9442334658, 9629868215 | | | |
| Erode | : | 9443340509, 9962101366 | Salem | : | 9443697145, 9345763347 |
| Jolarpet | : | 9443151947, 9443556702 | Tambaram | : | 9789081148, 9789883921 |
| Kanchipuram | : | 8939353511, 9444914836 | Tirupur | : | 9789402824, 9994218924 |
| Madurai | : | 944290000, 9344100600 | Tuticorin | : | 8903516632 |
| Marthandam | : | 9443145332, 9443148688 | Tirunelveli | : | 9894947517, 9952052410 |